**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்**

**முன்னிலை:- திருமதி.N.வள்ளியம்மா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண் 1, மதுராந்தகம்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ம் நாள் திங்கள்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 523/2025**

**CNR No. TNCG-15-002943-2025**

| | |
|---|---|
| அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>ஜி8 ஒரத்தி காவல் நிலையம்<br>குற்ற எண்.38/2025<br>இதச பிரிவுகள்.296(b), 115(2), 118(1), 351(3) of BNS and 4 of TNPHW Act. | குற்றமுறையீட்டாளர் |
| எதிர் | |
| A1-வரதன், வயது.55, த/பெ.ராமய்யா,<br>மாரியம்மன் கோயில் தெரு, முருங்கை கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A2- கார்த்திக், வயது.28, த/பெ.வரதன்,<br>மாரியம்மன் கோயில் தெரு, முருங்கை கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A3- கதிர்வேல்(எ)அஜித், வயது.26, த/பெ.வரதன்,<br>எண்.5, அய்யனார் கோயில் தெரு, முருங்கை கிராமம், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A4-சாந்தி, வயது.34, க/பெ.துரை,<br>எண்.28, குளக்கரை தெரு, முருங்கை கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | எதிரிகள் |

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு ROC. No. 814/2020/RG/F1, Dt 07.04.2021 இன் படியான இவ்வழக்கின் விவரங்கள் கீழ்வருமாறு :-

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. I, Madurantakam. |
| 2. | Name of the Judge | Tmt. N.Valliamma, B.Sc., B.L., |
| 3. | Date of Judgment | 15.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC.523/2025<br>TNCG – 15– 002943–2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Inspector of Police, Orathy PS.<br>**Complainant** |
| | | A1–வரதன், வயது.55, த/பெ.ராமய்யா,<br>A2– கார்த்திக், வயது.28, த/பெ.வரதன்,<br>A3– கதிர்வேல்(எ)அஜித், வயது.26, த/பெ.வரதன்,<br>A4–சாந்தி, வயது.34, க/பெ.துரை,<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 13.03.2025 |
| 7. | Date of Complaint | 14.03.2026 |
| 8. | Date of Arrest if any and remand | A1,A2–16.03.2025 A3–A4–<br>Anticipatory Bail –25.03.2025 |
| 9. | Period of Remand of the Accused | A1,A2–16.03.2025–19.03.2025 |
| 10. | Date of release on bail | A1,A2– 19.03.2025, Anticipatory Bail – 02.04.2025 |
| 11. | Date of Final Report | 24.07.2025 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | --- |
| 13. | Date of Questioning of the accused U/s. 316 of BNSS | 12.03.2026 |

<table>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the Witnesses</td><td><table>
<tr><th>Witness</th><th>Cheif</th><th>Cross</th></tr>
<tr><td>PW1</td><td>04.06.2026</td><td>04.06.2026</td></tr>
<tr><td>PW2</td><td>04.06.2026</td><td>04.06.2026</td></tr>
<tr><td>PW3</td><td>04.06.2026</td><td>04.06.2026</td></tr>
<tr><td>PW4</td><td>11.06.2026</td><td>11.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 317 of the Code</td><td>---</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.351 (1) (b) of the BNSS</td><td>15.06.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>---</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>06.12.2025</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>15.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>15.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>If any delay, give Explanation</td><td>---</td></tr>
</table>

*********************

இவ்வழக்கானது 06.12.2025 ம் இந்நீதிமன்றத்தால் கோப்பில் எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்காக 15.06.2026-ம் தேதியன்று என்முன்பாக வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திருமதி.M.நித்யா நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.M.மணிகண்டன், திருமதி.K.பிரியாஇளவரசி அவர்கள் முன்னிலையாகியும், ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த

பின்னர் இன்று  இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. கடந்த 13.03.2025ம் தேதி இரவு சுமார் 08.00 மணிக்கு ஜி8 ஒரத்தி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முருங்கை கிராமத்தில் வசிக்கம் இவ்வழக்கின் வாதியான சாட்சி–1 ஆனந்தன் என்பவர் அவரது வீட்டில் இருந்த போது, இவ்வழக்கின் எதிரிகள் மூவரும் சாட்சி–1ன் பெற்றோரிடம் சொத்து சம்மந்தமாக தகராறு செய்த போது அதை கண்ட சாட்சி–1 ஆனவர் மேற்படி எதிரிகளிடம் ஏன் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்ட போது A1–A3 எதிரிகள் மூவரும் சாட்சி–1ஐ பார்த்து ங்கோத்தா தெவிடியா பையா பொட்ட பாடு நீ யாருடா எங்களை கேட்க என்று அசிங்கமாக பேசியும், A2 எதிரி கதிர்வேல்(எ)அஜித்தும், A2 எதிரி கார்த்திக் ஆகிய இருவரும் சாட்சி–1ஐ கையால் அடித்து பிடித்து கொள்ள A1 எதிரி வரதன் என்பவர் கட்டையால் தலையில் அடித்து சாட்சி–1 க்கு சொறப்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். அதை பார்த்து தடுத்த சாட்சி–2 ஐ A4 எதிரி சாந்தி க/பெ.துரை என்பவர் அசிங்கமாக பேசி கையால் அடித்து புடவையை கிழித்துள்ளார். மேற்படி எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சொத்தை எங்களுக்கு பாகம் தரவில்லை என்றால் உங்களை குடும்பத்தோடு ஒழித்துவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது  சட்டப்பரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS and 4 of TNPHW Act ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், வழக்கினை 06.12.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் பிணையில் சென்றிருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS ன் கீழ் குற்றப் பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் பிரிவு 274 BNSS ன் கீழ் எதிரிகளின் மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS and 4 of TNPHW Act ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் BNSS பிரிவு 277–ன் கீழ் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் 9 பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளனர். பட்டியல் சாட்சிகளான 4.பொன்பாரதி, 5.வரதன் 6.ரமேஷ் 7. டாக்டர்.சீனுவாசன் 8.மாணிக்கம் 9.பூபாலன் ஆகியோர்களை அரசு தரப்பில் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. அரசு தரப்பில் சான்று பொருள்.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**5.** அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகாரினை பெற்ற காவல் உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். அதன் பின்பு சாட்சிகளிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுள்ளார். பின்னர் புலன்

விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தார். அ.சா.1 சாட்சி சம்பவம் குறித்தும், சம்பவத்தின் தனக்கு ஏற்பட்ட காயம் குறித்தும், புகார் கொடுத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட ஓரத்தி காவல் நிலையத்தின் தற்போதைய சிறப்பு உதவி ஆய்வாளர், இந்த வழக்கின் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது, இந்த வழக்கை விசாரணை செய்தது மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் வினவிய போது எதிரிகள் அதனை மறுத்து கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டது என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அதற்கு ஆதரவாக உள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார். மாறாக எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரிகளை குற்றப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் விதமாக சாட்சியங்கள் அமையவில்லை என்றும், எனவே, எதிரிகளை குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார். இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**7.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 296(b), 115(2), 118(1),

351(3) of BNS and 4 of TNPHW Act-ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**தீர்வு**

**8**. இந்நிலையில் அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் அளித்த புகாரில் நான் சொந்தமாக விவசாயம் செய்து வருகிறேன். எனது நிலத்தில் விளையும் பூக்களை திண்டிவனத்தில் பூ கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 5 அண்ணன்கள் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகி அவரவர் குடும்பத்துடன் தனிதனியே வசித்து வருகிறோம். எனது அப்பா அம்மா இருவரும் அவர்களுக்கு சொந்தமான ஓட்டு வீட்டில் வசித்து வருகிறோம். எனது அப்பாவிற்கு சொந்தமாக உள்ள நிலத்தை எனது அப்பா கடந்த 15 வருடங்களுக்கு முன்பே எங்கள் அனைவருக்கும் தனித்தனியாக பிரித்து கொடுத்துவிட்டார். அன்று முதல் எனது வயதான அம்மாவையும் அப்பாவையும் என்னுடன் பிறந்தவர்கள் யாரும் கவனிக்கவில்லை. நான்தான் அவர்களுக்கு தேவையானவற்றை வாங்கி கொடுத்து பார்த்து கொள்கிறேன். கடந்த 3 மாதத்திற்கு முன்பு எனது அம்மா அவர் பெயரிலிருந்த 20 செண்ட் நிலத்தை என்மீது எழுதி வைத்தார். அதனால் எனது 3வது அண்ணன் வரதன் என்பவர் அந்த நிலத்தில் பாகம் கேட்டு என் அம்மாவிடம் அடிக்கடி தகராறு செய்து வந்தார். அதனால் நான் எனது அண்ணன் வரதனுக்கு 2 செண்ட் நிலத்தை தான செடில்மெண்ட் எழுதிகொடுத்தேன். அது போதாது என்று எனது அண்ணன் என்னிடம் அடிக்கடி தகராறு செய்து வந்தார். அதே போல கடந்த 13.03.2025ம் தேதி இரவு சுமார் 08.00 மணிக்கு எனது அண்ணன் வரதன் மற்றும் அவரது மகன்கள் கதிர்வேல்(எ)அஜித், கார்த்திக் ஆகிய மூவரும் என் அம்மா அப்பாவிடம் தகராறு செய்தார்கள். அதனால் நான் அவர்களிடம் ஏன் அம்மா அப்பாவிடம் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு மூவரும் என்னை ங்கோத்தா தெவிடியா பையா பொட்ட பாடு நீ யாருடா

எங்களை கேட்க என்று அசிங்கமாக பேசினார்கள். ஏன் இப்படி அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கதிர்வேல்(எ)அஜித்தும், கார்த்தியும் என்னை கையால் அடித்து என்னை பிடித்து கொண்டனர். எனது அண்ணன் வரதன் கட்டையால் என்னை தலையின் மேல்பகுதியிலும் தலையின் பின்பகுதியிலும் அடித்தார். அதனால் எனக்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டு மயங்கிவிட்டேன். அதை பார்த்த எனது மனைவி தேவி ஓடி வந்து எனக்கு தண்ணீர் தெளித்து அவர்களிடம் இதை பற்றி கேட்ட போது வரதனின் மனைவியின் அக்கா சாந்தி என்பவர் எனது மனைவி தேவியை அசிங்கமாக பேசி கையால் அடித்து அவரது புடவையை கிழித்துவிட்டார். பிறகு நால்வரும் சேர்ந்து சொத்தை எங்களுக்கு பாகம் தரவில்லை என்றால் உங்களை அடித்து குடும்பத்தோடு ஒழித்துவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்தனர். காயம்பட்ட என்னை எனது மனைவி 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி சிகிச்சை பெற்று மருத்துவர் ஆலோசனை படி மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்று வருகிறேன். சிகிச்சையில் இருந்த போது 14.03.2025ம் தேதி ஒரத்தி காவல் நிலைய போலிசார் தங்கள் சண்டை பற்றி விசாரித்தார்கள். நான் மேற்படி நடந்ததை வாக்குமூலமாக கொடுத்தேன். பின்னர் படிக்க கேட்டேன் சொன்னபடி இருந்தது என்று விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**9.** மேற்படி அ.சா.1 நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. அந்த கூட்டத்தில் என்னையும் என் அப்பாவையும் யாரோ அடித்துவிட்டார்கள். யார் அடித்தார்கள் என்று தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

என்னுடைய தான். வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** வழக்கு குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 நீதிமன்ற சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. அந்த கூட்டத்தில் என்னையும், என் கணவரையும் யாரோ அடித்துவிட்டார்கள். யார் அடித்தார்கள் என்று தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**11.** அ.சா.4 இந்த வழக்கில் விசாரணை அதிகாரி கோப்புகளின் அடிப்படையில் விசாரணை நடைமுறைகளை பொறுத்து விரிவாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கின் குற்றமுறையீட்டாளரும், வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபருமான அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த போதிலும், அவர்களை குற்றம்சாட்டி எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. இந்த நிலையில் அ.சா.4 ன் வாய்மொழி சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு இந்த வழக்கின் எதிரிகள் தான் அரசு தரப்பில் சாட்டப்பட்டுள்ள குற்றத்தை புரிந்தார்கள் என தீர்மானிக்க இயலாது.

**12.** மேலும் இந்த வழக்கில் குற்ற முறையீட்டாளரும், எதிரிகளும் ஏற்கனவே சமாதானம் ஆகிவிட்டதாக வழக்கை சமரசமாக முடித்து கொள்ள அனுமதிக்க கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகளுக்கு எதிரான குற்றமானது சமாதானம் செய்து கொள்ளக்கூடிய குற்றம் அல்லாத காரணத்தால் பா.கு.பா.ச பிரிவு 359 ன் கீழான மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நமது மாண்பமை உச்ச நீதிமன்றம் தரப்பினர்கள் தங்களுக்குகிடையே சமாதானம் செய்து கொண்ட நிலையில் அந்த குற்றத்தின்

தன்மை பொது நலனை பாதிக்காது என்ற நிலையில் இருந்தால், அது போன்ற வழக்குகளை தொடர்ந்து நிலுவையாக வைத்திருப்பதால் எவ்வித பலனும் ஏற்படபோவதில்லை என்றும், அந்த சமாதானத்தின் அடிப்படையில் வழக்கை முடிவுக்கு கொண்டு வரலாம் என தீர்ப்பு கண்டுள்ளது. நமது மாண்பமை உச்ச நீதிமன்றம் **Dr. Arvind Barsaul Etc vs State of Madhya Pradesh & Another** என்ற வழக்கில்,

> **" We have heard learned counsel for the parties at length. The parties have compromised and the complainant Smt. Sadhna Madnawat categorically submitted that she does not want to prosecute the appellants. Even otherwise also, in the peculiar facts and circumstances of the case and in the interest of justice, in our option, continuation of criminal proceeding would be an abuse of the process of law "**

என தீர்வு கண்டுள்ளது. இந்த வழக்கிலும் தரப்பினர்கள் சமாதானமாகிவிட்டதாக மனுதாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாலும், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்களையும் ஒப்பிட்டு பரிசீலித்து பார்க்கும் போது, புகாரில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்து வலியுறுத்தியோ, மேலும் குற்ற சம்பவத்துடன் எதிரிகளை இணைத்து தொடர்புபடுத்தியோ அரசு தரப்பில் வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததாலும், எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS and 4 of TNPHW Act–ன் கீழான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**13.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி, இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS and 4

of TNPHW Act-ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை 271(1)-BNSS ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**14.** இவ்வழக்கில் வழக்கு சொத்தான புங்கமரகட்டை P.I.No.105/2025 என்று எண் அளிக்கப்பட்டு மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**15.** எதிரிகளின் பிணை பத்திரம் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ம் நாள் திங்கட்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.15 10:35:10 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மதுராந்தகம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-</u>**

| List of Witness | Name of the Witness |
|---|---|
| PW1 | ஆனந்தன் த/பெ.ராமைய்யா |
| PW2 | தேவி க/பெ.ஆனந்தன் |
| PW3 | சம்பத் த/பெ.ராஜேந்திரன் |
| PW4 | இளங்கோவன் /காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | |
|---|---|
| Ex.P.1 | புகாரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| Ex.P.2 | புகார் வாக்குமூலம் |
| Ex.P.3 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.4 | பார்வை மகஜர் |
| Ex.P.5 | மாதிரி வரைபடம் |
| Ex.P.6 | கைப்பற்றுதல் மகசர் |
| Ex.P.7 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| Ex.P.8 | படிவம் 91 |

அரசு தரப்பு சான்று பொருள்.1 :- புங்கமர கட்டை

எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை
எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை
எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை

VALLIAMMA
Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.15 10:35:16 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**மதுராந்தகம்.**

CC 523/2025

15.06.2026

எதிரிகள் ஆஜர். தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) of BNS and 4 of TNPHW Act–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 பிரிவு 271(1)ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

JMNo.I/MKM